DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI

| | | |
|---|---|---|
| CC.NO. 69/21 | Crime No.:310/15 | Police Station :APPAKUDAL |
| PW : 1 | C.MP. | DVC : |

| | | | |
|---|---|---|---|
| Name | ஜெயகுமார் | Caste | |
| Father Name | துரைராஜ் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | 59 |

| | |
|---|---|
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 187301 the day of | 12.04.2022 |

**முதல் விசாரணை -**

நான் சவுரிபாளையம், கோவையில் குடியிருந்துகொண்டு, டெக்ஸ்டைல் வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 2015, செம்படம்பர் மாதம் இரிடியம் பொருள் இருப்பதாக துளசிதாஸ் என்பவர் மூலம் தகவல் கிடைத்தது. துளசிதாஸ், 1ம் எதிரி ரமேஷ்குமார், 2ம் எதிரி மகேஷ் ஆகியோரை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். எதிரிகள் இருவரும் இரிடியம் பொருளை நீங்கள் பார்க்கவேண்டும் என்றால் நாங்கள் சொல்லும் வங்கி கணக்கிற்கு நீங்கள் ரூ.50 இலட்சம் பணம் கட்டவேண்டும் என்று கூறினார்கள். பிறகு நாங்கள் பணம்ஏற்பாடு செய்துவிட்டு, 07.09.15 அன்று என்னுடைய வங்கி சிட்டி வங்கியிலிருந்து ரூ.25 இலட்சம் பணத்தை டெல்லியில் உள்ள Kianfin Services என்ற நிறுவனத்தின் வங்கி கணக்கிற்கு அனுப்பிவைத்தேன். அந்த பணத்தை அனுப்பும்போது, மேற்கண்ட எதிரிகள் இருவரும் என்னுடன் எனது வங்கிக்கு வந்தனர். அதே நாளில் துளசிதாஸ் வங்கியான கோவை கரூர்வைஸ்யா வங்கியில் இருந்து ரூ.20 இலட்சத்தை மேற்படி டெல்லியில் உள்ள Kianfin Services என்ற நிறுவனத்தின் வங்கி கணக்கிற்கு அனுப்பிவைத்தார். மேற்படி எதிரிகள் இருவரும் நாளை மறுநாள் அதாவது 09.09.15 அன்று நீங்கள் மேட்டுபாளையத்தில் உள்ள காய்கறி மார்க்கெட் அருகில் வந்தால் இரிடியம் பொருட்களை காண்பிப்பதாக கூறினார்கள். 09.09.15 அன்று காலை நானும், ரவிகுமார், துளசிதாஸ், ரங்கநாதன், சந்திரமோகனின் தந்தை ஆகியோர்கள் எதிரிகள் கூறியவாறு மேட்டுபாளையம் காய்கறி மார்க்கெட் அருகில் சென்றோம். அங்கிருந்த எதிரிகள் வாங்க காட்டுகிறோம் என கூறி, சிறிது தூரம் எங்களை நடக்க வைத்து, எதிரிகள் அங்கிருந்து தப்பித்துவிட்டனர். பிறகு, எதிரிகள் இருவரும் அவர்களது போனையும் ஆப் செய்துவிட்டனர். கடன் வாங்கி கொடுத்த பணம் என்பதால் நாங்கள் அவர்களை அனைத்து இடங்களிலும் தேடினோம். அவ்வாறு எதிரிகளை நாங்கள் தேடியபோது, 11.12.15 அன்று அத்தாணி, செம்புளிச்சாம்பாளையம், தேவன்தோட்டத்திற்கு எதிரிகள் இருவரும் வருவதாக எங்களுக்கு தகவல் கிடைத்தது. நான் தேவன்தோட்டம் செல்வதற்காக துளசிதாஸை அழைத்தபோது அவர் தனக்கு ரியல் எஸ்டேட் வேலை இருப்பதால் தன்னால் வரஇயலாது என தெரிவித்துவிட்டார். பிறகு, நான், ரவிகுமார், ரங்கநாதன், பாலதண்டபானி, ராஜேந்திரன் ஆகியோர் மேற்படி தேவன்தோட்டத்திற்கு சென்றோம். அங்கு எதிரிகள் இருவரும் இருந்தனர். நான் எதிரிகளிடம் பொருட்களை கொடுங்கள் அல்லது நான் கொடுத்த பணத்தை திருப்பி கொடுங்கள்

என கேட்டேன். அதற்கு எதிரிகள் இருவரும் என்னை தேவடியா பையா, கண்டாரோழி பையா என தகாத வார்த்தைகளால் திட்டி எங்க பணத்தை கொடுத்தயோ அங்க போய் கேளுங்க எங்ககிட்ட எதுக்கு கேட்கிறீங்க பணத்தை பத்தி கேட்டீங்கன்னா உயிரோட கோவை போய் சேரமாட்டீங்க என எதிரிகள் எங்களை மிரட்டினார்கள். பிறகு நானும், என்னுடன் வந்த மேற்படி நபர்களும் ஆப்பக்கூடல் கா.நிலையத்திற்கு சென்று மேற்படி எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு புகார் அளித்தேன். அந்த புகார் மனுவை நான்தான் எழுதினேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் எழுதியதுதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி புகார் மனு **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரிகளை எனக்கு தெரியும். நீதிமன்றத்தில் முன்னிலையாகி உள்ள நபர்கள்தான் என்னை ஏமாற்றிய நபர்களாவார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.